# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.382/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பூமிநாதன் | க–பெ | முத்து |
| ஊர்: | : | சோனார்கோட்டை | சமயம்: | |
| வயது: | : | 30/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கட்டிட வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2025**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் சோனார் கோட்டையில் வசித்து கட்டிட வேலை செய்து வருகிறேன். அசா1 எனது அப்பா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 29.09.2014 அன்று காலை 7 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன். எனது தகப்பனார் அசா1 வீட்டில் இருந்தார். எனது தகப்பனார் வைக்கோல் போரில் வைக்கோல் அள்ளிக்கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு வந்து பொது இடத்தில் வைக்கப்பட்டிருந்த தண்ணீர் தொட்டியில் வைக்கப்பட்டிருந்த தண்ணீரை ஏன் பிடிக்கிறாய் என்று எதிரிகள் சொல்லிக்கொண்டு அந்த மகனை இந்த மகனை என்றும் புண்டை மகனை என்றும் கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள். எதிரிகள் இருவரும் முள் வேலி மற்றும் அரிவாள் கம்பை எடுத்துக்கொண்டு அசா1 ஐ இடது மற்றும் வலது தோள்பட்டை மற்றும் தலை ஆகிய பகுதிகளில் அடித்தார்கள். அப்போது ஆஜர் எதிரி காளிமுத்து மகன் பெரியசாமி என்பவர் சம்பவ இடத்திற்கு வந்து அரிவாள் கம்பை கொண்டு அசா1 ஐ தாக்கினார். இந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். நான் அந்த இடத்திற்கு போகவில்லை என்றால் எனது அப்பாவை எதிரிகள் அடித்தே கொன்று இருப்பார்கள். நான் காயம் பட்ட எனது தகப்பனாரை காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்று பின்னர் கண்டனூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைகாக அழைத்துச்சென்று அங்கிருந்த மருத்துவர்கள் பரிந்துரையின் அடிப்படையில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றோம். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொன்ன போது எங்கே இருந்தேன் என்றால் நான் வீட்டில் இருந்தேன். சத்தம் கேட்டு தான் அங்கு சென்றேன். எதிரிகள் கொடுத்த புகாரில் என்மீதும் வழக்கு சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ளது. சம்பவத்தின் போது நான் தடுக்க முயற்சி செய்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு நானும் எனது

தகப்பனாரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் எனது அண்ணண் தான் விசாரணைக்கு சென்றார் நான் செல்லவில்லை. எங்களுக்கும் எதிரிகளுக்கும் அடிக்கடி தகராறு வரும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் நான்இல்லை என்றும் தகப்பனார் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் உள்ளூரில் இருந்து மருத்துவமனைக்கு யாரும் உடன் வரவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.15 17:59:03 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.382/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்து | க–பெ | உடையப்பன் |
| ஊர்: | : | சோனார்கோட்டை | சமயம்: | |
| வயது: | : | 55/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2025**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் சோனார்கோட்டையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 29.09.2014 அன்று காலை 7 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன் அப்போது பாண்டி மற்றும் மூக்கையா அங்கு வந்தார்கள். இருவரும் என்னை பார்த்து தண்ணீர் தொட்டியில் தண்ணீரை பெருக்கி என்னடா வீணாக்குகிறார் என்று புண்டை மகனை என்ற கீழ் நோக்கிய வார்த்தைகளால் தரகுறைவாக திட்டி முள்வேலி கம்பால் இருவரும் என்னை தோள்பட்டையில் மாறி மாறி அடித்தார்கள். அப்போது பாண்டியின் தம்பி பெரியசாமி என்பவர் அரிவாள் கம்பை எடுத்துக்கொண்டு என்னை வெட்டினார். நான் வீட்டிற்குள் நுழைய முயற்சித்த போது காளிமுத்து என்னை வழி மறித்து கம்பால் அடித்தார்கள். எனக்கு இந்த சம்பவத்தில் உச்சந்தலை மற்றும் தோள்பட்டை ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டது. பின்னர் சிகிச்சைக்காக நான் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கும் பின்னர் தேவக்கோட்டை அரசு மருத்துவமனைக்கும் சிகிச்சைக்காக சென்றேன். பின்னர் காவல்நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி எதிரிகள் மீது புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1.** எதிரிகள் அங்கிருந்து செல்லும்போது இன்றைக்கு தப்பித்து விட்டாய் என்றைக்கு இருந்தாலும் எனது கையில் உனக்கு சாவு உள்ளது என்று சொல்லி சென்றார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகாரை நான் எழுத்து பூர்வமாக எழுதினேனா என்றால் போலீசார் புகாரை எழுதினார்கள். எதிரிகளும் நானும் அண்டை வீட்டார்கள் என்று சொன்னால் சரிதான். இரண்டு வீட்டிற்கும் நடுவில் தெரு குழாய் ஒன்று உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சுமார் 25 க்கும் மேற்பட்ட ஆடுகள் மற்றும் 10 மாடுகள் வளர்த்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். நானும் எதிரிகளும் வெவ்வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி தெரு குழாயை நான் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தி வந்ததால் எதிரிகளுக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். எதிரிகளின் ஜாதியை குறிப்பிட்டு நான் இழிவாக

பேசியதால் என்மீது சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை காவல்நிலையத்திலும் சொன்னேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தின் போது பெரியசாமி என்பவர் சம்பவ இடத்தில் இல்லை என்றும் அவர் அரிவாளால் வெட்ட வில்லை என்றும் சொன்னால் சரியல்ல அவர் அங்கு இருந்தார். புகாரில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்மீது பதிவு செய்யப்பட்டுள்ள PCR வழக்கை வாபஸ் வாங்க மறுப்பதால் அவர்கள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் எங்கள் குடும்பத்தாரை தவிர தனிநபர் சாட்சி எவரும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.15 17:59:12 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி